மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

O.S.284 /2009

வாக்குமூலம்: வா.சா.1 – குப்புச்சாமி

23.06.2025: சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : வாகரை கிராமத்தில் அமைந்துள்ள 3 ஏக்கர் 63 செண்ட் மானாவாரி நிலம் என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கு கிணறு மற்றும் நீர்பாசன வசதி கிடையாது என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கு வாய்க்கால் மூலமாகவும் நீர்பாய்ச்ச முடியாது என்றால் சரிதான். நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்கத் தெரியும் என்றால் சரிதான். வாகரை கிராமத்தில் அமைந்துள்ள 1 ஏக்கர் 85 செண்ட் 2 ஆம் பிரதிவாதி ஆகிய எனது சகோதரர் சிவசாமி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல, மேற்படி நிலம் பொதுவாக உள்ளது. மேற்படி பொது நிலத்திற்கு கூட்டுப்பட்டா உள்ளதா என்றால் இல்லை. தொப்பம்பட்டி கிராமத்தில் மொத்தம் 8 ஏக்கர் 43 செண்ட் உள்ளது. தொப்பம்பட்டி கிராமத்தில் மொத்தம் 8 ஏக்கர் 43 செண்ட் எனது தகப்பனார் குப்பண கவுண்டர் சுயமாக வாங்கியது சொத்து என்றால் சரிதான். கூட்டுக்குடும்பமாக இருந்து வந்ததோம். குடும்பத் தலைவர் என்ற பெயரில் மேற்படி சொத்து என் தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி 8 ஏக்கர் 43 செண்ட் நிலம் எனது தகப்பனார் சுயமாக வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. நான் பழனியில் எங்கு டீ கடை வைத்து நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல, நான் சம்பளத்திற்கு டீ கடையில் வேலைக்கு சென்றேன். நான் எப்போதும் கூட்டுக் குடும்ப அனுபவத்தில் இல்லை என்றாலும், தனியாகத் தான் இருந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல, எனக்கு சிறுவயதிலிருந்து பொதுக் குடும்பத்தில் கூட்டுக் குடும்ப அனுபவத்தில் இருந்து தான் வந்தேன். எனக்கு திருமணமான பிறகு குடும்பத்தி பிரச்சனை ஏற்பட்டதால் நான் தனிக்குடித்தனம் சென்று விட்டேன். வாகரை கிராமம் 1 ஏக்கர் 85 செண்ட் விஸ்தீரணம் உள்ள நிலத்தை 1 ஆம் பிரதிவாதி தனது உயிருடன் இருந்த காலத்தில் கடந்த 04.01.2010 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தின் மூலம் 2 ஆம் பிரதிவாதியின் மக்களான இளவர்கள் ரஞ்சித், கிருத்திக் ஆகிய இருவருக்கும் அவர்கள் தாயாரான காளீஸ்வரி அவர்களை பாதுகாவலராக நியமித்து பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. காளீஸ்வரி, ரஞ்சித், இளவர் கிருத்திக் மேற்படி சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகின்றனர் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து காலியாக உள்ளது. தொப்பம்பட்டி கிராமத்தில் மொத்தம் 8 ஏக்கர் 43 செண்டில் 1 ஏக்கர் நிலத்தை குப்பண கவுண்டர் தனது உயிர் காலத்தில் கடந்த 11.05.2005 ஆம் தேதி 2 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி விட்டார் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் எழுதப்பட்ட தேதியிலிருந்து நாளது தேதி வரை மேற்படி நிலத்தை 2 ஆம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் மீதமுள்ள 7 ஏக்கர் 43 செண்டை குப்பண கவுண்டர் கடந்த

28.09.2006 ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்ட்ட உயில் மூலம் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி இறப்பிற்கு பிறகு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மேற்படி சொத்தில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாகரை கிராமத்தில் உள்ள சொத்துக்களுக்கும், தொப்பம்பட்டி கிராமத்தில் உள்ள சொத்துக்களுக்கும் எனக்கு சட்டப்படி பாகப்பிரிவினை கிடைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. தொப்பம்பட்டி கிராமத்தில் உள்ள சொத்துக்களில் எனக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகத்தை கடந்த 10.03.2014 ஆம் தேதி எனது மனைவியான திருமதி. கே.ரஞ்சிதம் அவர்களுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்றம் உத்தரவின்படி எழுதிக் கொடுத்தேன். மேற்படி நீதிமன்ற உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நான் கோரிய பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும், 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து கூட்டுக் குடும்பத்தில் விவசாய வேலைகள் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எழுதி வைக்கப்பட்ட உயில் மற்றும் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் மேற்படி சொத்துக்கள் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றாலும், எனக்கும் 4 பிரதிவாதிக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/-S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.